DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.11/2023**

**prosecution witness: Pw 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**A1 to A3 present**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அருள் ராஜ் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**25.05.2023**

முதல் விசாரணை:-

1. நான் அம்பேத்கர் நகரில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 24.09.2021-ம் தேதி இரவு நான் வீட்டில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அப்போது எனது மாமா மகள் கோட்டைஈஸ்வரி ஓடி வந்து என்னிடம் அப்பாவிற்கு இரத்தம் வருகிறது என்று என்னிடம் கூறினாள். நான் உடனே சென்று பார்த்தேன். அதன்பின்பு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவமனையில் சேர்த்து விட்டு நான் வந்துவிட்டேன்.போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் மருத்துவமனையில் சேர்க்கும் போது இரவு 08.30 மணி இருக்கும். மருத்துவ சிகிச்சை அளித்துவிட்டு அவரை கையோடு வீட்டிற்கு கூப்பிட்டு வந்துவிட்டோம் என்றால் இல்லை நான் தனியாக வந்துவிட்டேன். அவர்கள் ஆட்டோவில் வந்தார்கள். நான் மருத்துவமனையில் யாரையும் சேர்க்கவும் இல்லை, காயம்பட்ட முனியாண்டி எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.